கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.** 126/2020

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 29.10.2024 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC), திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 29.10.2024 | சாட்சி | சா.சா.1 |
| பெயர் | ராஜேந்திரன் | வயது.. | 74 |
| தந்தை பெயர்.. | கோவிந்தன் | கிராமம்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை..**

நான் இவ்வழக்கில் 3 ம் நபர். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வந்ததன் பேரில் இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். சாட்சி சம்மனில் புவனகிரி அக்கிரஹாரதெரு தேவாங்கர் திருமண மண்டபத்தில் என் வசம் இருப்பதாக தெரிவித்து 17.10.2018 நாளிட்ட புவனகிரி சாமுண்டீஸ்வரி ஆலைய நிர்வாகிகளின் (நாட்டாமைதாரர்கள்) தீர்மான புத்தகம் சமர்பிக்கும்படி தெருவிக்கப்பட்டிருந்தது. நான் அந்த திருமணமண்டபத்தில் கணக்கராக தான் பணி செய்து வருகிறேன். என்னிடம் சம்மனில் குறிப்பிட்டுள்ள நாட்டாமைதாரர்கள் தீர்மான புத்தகம் இல்லை. அந்த தீர்மான புத்தகம் நாட்டாமைதாரர்களிடம் தான் உள்ளது. நாட்டாமைதாரர்கள் பெயர் சு.ஆறுமுகம், ந.கிருஷ்ணசாமி, பாலசுப்பிரமணியன், செல்வம் ஆகியோர்கள் உள்பட மொத்தம் 11 நாட்டாமைதாரர்கள் இருக்கிறார்கள். இந்த 11 நபர்களில் யாரிடம் அந்த தீர்மான புத்தகம் உள்ளது என்று எனக்கு தெரியாது.

**சாட்சியிடம் ஆவணங்களை மட்டும் தான் நீதிமன்றத்தில் சமர்பிக்கும் படி தெரிவிக்கப்பட்டிருந்ததால் இதற்கு குறுக்கு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,

Additional District Munsif(FAC)
Chidambaram.